TAM206C

# நாடகம் நடித்தல்

ஒரு கதையை அல்லது பாடத்தை நாடகமாக நடித்துக் காட்டுதல் என்பது மாணவர்கள் தமது புரிதலை மற்றவர்களுக்கு வெளிப்படுத்தும் முறைகளில் ஒன்றாகும். கதையைப் புரிந்து கொள்ளத் ஒவ்வொருவரும் முயற்சித்தல், பேசுதல், உரையாடல் எழுதுதல், தேவையான பொருட்களைத் தயாரித்தல், தேவையான முகபாவங்களைக் கற்றல், பேசுவதற்குப் பயமின்மை, உணர்வுகளைப் புரிந்து கொண்டு மற்றவர்களுக்கும் புரியவைத்தல்... போன்ற பல திறன்கள் பெருகுவதோடு குழுமனப்பான்மையும் வளரும். மாணவர்கள் நாடகத்தை முறையாக நடத்தினால், அவர்களுக்குக் கதையோ பாடமோ சரியாகப் புரிந்துள்ளது என்று ஆசிரியர் தெரிந்து கொள்ளலாம். மாணவர்களை வழிநடத்த சில வழிமுறைகள் இதோ,

- மாணவர்களை 2 குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவிற்கும் 12 பட அட்டைகளையும் கொடுக்க வேண்டும். பட அட்டைகளின் பின்னாலேயே அவற்றிற்கான கதைவரிகளும் இருக்கும். இவைகளை மாணவர்கள் குழுவாகச் சேர்ந்து பேசி, உரையாடல்களாக மாற்ற வேண்டும்.
- ஆசிரியர் முதலில் ஒரு அட்டையை எடுத்து வரிகளை எவ்வாறு உரையாடல்களாக மாற்றலாம் என்று வகுப்பில் கலந்துரையாடி, மாணவர்கள் உரையாடலைக் கரும்பலகையில் எழுத வேண்டும்.
- அவ்வாறு கலந்துரையாடும் போது,
    - எந்த காட்சி?
    - எந்த இடம்?
    - கதாபாதிரங்கள் யாவர்?
    - என்னென்ன துணைபொருட்கள் தேவை?
    - கதாபாத்திரங்களின் செய்கைகள் என்ன?
    - என்ன பேசிக்கொள்வார்கள்?

  போன்றவற்றை மனதில் கொண்டு உரையாடுதல் வேண்டும். உதாரணமாக,
    - காட்சி 1: குரங்கும் ஆமையும் வாழை மிதந்து வருவதைப் பார்த்தல்
    - இடம்: ஆற்றங்கரை

    - கதாபாத்திரங்கள்: குரங்கு, ஆமை
    - துணைபொருட்கள்: வாழைமரம், ஆறு போன்ற அமைப்பு
    - உரையாடல்:
        - குரங்கு: நண்பரே! அங்கே பார்.
        - ஆமை: என்ன நண்பா?
        - குரங்கு: ஆற்றில் ஒரு வாழை மிதந்து வருகிறது!!!
        - ஆமை: ஆமாம் நண்பா! வா, அதை கரைக்கு இழுத்து வரலாம்.
    - (இருவரும் ஓடிச் சென்று வாழைமரத்தை இழுத்து வந்தன)
- மாணவர்களின் நாடகத்தை வீடியோ பதிவு செய்து அவர்களுக்குப் போட்டுக் காட்டலாம். அச்சமயத்தில் வகுப்பறையில் கீழ்வருமாறு உரையாடலாம்.
    - உரையாடல் சத்தமாகவும் தெளிவாகவும் கேட்கிறதா?
    - நடிப்பவர்கள் கதாபாத்திரத்திற்கு ஏற்றவாறு சரியான முகபாவங்களையும் உடலசைவுகளையும் கொடுத்தார்களா?
    - துணை பொருட்களைச் சரியாகப் பயன்படுத்தினார்களா?
    - இருந்த இடத்தை முழுமையாகப் பயன்படுத்தினார்களா?
    - முதல் முறை பார்ப்பவர்களுக்கு இந்தக்கதை முழுமையாகப் புரியுமா?
    - வேறு என்ன மாற்றங்களைச் செய்ய வேண்டும்?
- உரையாடலில் கிடைத்த ஆலோசனைகளின் அடிப்படையில் சில மாற்றங்களைச் செய்து மீண்டும் ஒருமுறை (குழு விரும்பினால்) நடிக்க வைக்கலாம்.
- இரண்டாவதுமுறை நடிக்கும் நாடகத்தை வீடியோவாகப் பிடித்து பள்ளியின் மற்ற ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் காட்டலாம்.